**செய்தி வெளியீடு எண் : 1031** **நாள் : 27.05.2023**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை உள்ளிட்ட பணப்பலன்களுக்குரிய காசோலைகளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் **கடந்த மே–2020 முதல் நவம்பர்–2022** வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் **6,281 நபர்களுக்கு** வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் **ரூ.1,582.44 கோடி** வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதனை தொடர்ந்து, **முதற்கட்டமாக** கடந்த 01.12.2022 அன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த **மே–2020 முதல் மார்ச்–2021** வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் **1,241** நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் **ரூ.242.67** கோடியும், **இரண்டாம் கட்டமாக** கடந்த 27.03.2023 அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த **ஏப்ரல்–2021 முதல் மார்ச்–2022** வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் **1,626** நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் **ரூ.308.45** கோடி வழங்கினார்கள்.

**இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த ஏப்ரல்–2022 முதல் நவம்பர்–2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 3,414 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.1,031.32 கோடி வழங்கப்படவுள்ளது.**

**மூன்றாவது கட்டமாக** சென்னையில் இன்று (27.05.2023) அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் **திரு.சா.சி.சிவசங்கர்** அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் **திரு.உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 441 நபர்களுக்கு ரூபாய் 115.47 கோடி மற்றும் அரசுப் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 171 நபர்களுக்கு ரூபாய் 55.76 கோடி, ஆக மொத்தம் 612 நபர்களுக்கு ரூபாய் 171.23 கோடிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் திரு.மு.சண்முகம், மாண்புமிகு மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திரரெட்டி,இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.அ.அன்பு ஆபிரகாம், அரசுப் விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.கு.இளங்கோவன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் திரு.கி.நடராசன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in